## உலக மனநல தினம்:

# மெட்ரோ ரெயிலில் மனநல நோயாளிகள் பயணம்

சென்னை, ஆக.11–

உலக மனநல தினம் நேற்று கடைபிடிக்கப்பட்டது. இதை முன்னிட்டு 'மனநலம் காப்போம் தற்கொலை தடுப்போம்' என உலகம் முழுவதும் பல்வேறு அமைப்பினர் மற்றும் டாக்டர்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தினர்.

இதன் ஒரு பகுதியாக சென்னை கீழ்ப்பாக்கம் அரசு மனநல காப்பகத்தில், உலக மனநல தினத்தை முன்னிட்டு, தனியார் தொண்டு நிறுவனத்தின் உதவியுடன், மனநல காப்பகத்தில் சிகிச்சையில் உள்ள 20 நோயாளிகள் நேற்று மெட்ரோ ரெயிலில் பயணம் மேற்கொண்டனர். கீழ்ப்பாக்கம் மெட்ரோ நிலையத்தில் இருந்து விமானநிலையம் வரை அவர்கள் மெட்ரோ ரெயிலில் பயணம் செய்தனர்.

மனநல காப்பகத்தில் சிகிச்சை பெற்று வரும் இவர்கள், தனிமையை உணராமல் இருக்கவும், சாதாரண மனிதர்களாக உணர்வதற்காகவும் இந்த பயணம் ஏற்பாடு செய்யப்பட்டதாக கீழ்ப்பாக்கம் அரசு மனநல காப்பக இயக்குனர் டாக்டர் பூர்ண சந்திரிகா தெரிவித்தார். இதைப்போல் கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனையில் உலக மனநல தினத்தை முன்னிட்டு மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் மருத்துவ மாணவர்கள் உள்ளிட்டோர் மனித சங்கிலி நடத்தி தற்கொலையை தடுக்க பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.